**தேசிய வீதி வலையமைப்பின் பிரதான பாலங்கள் நிர்மாணச் செயற்திட்டம் (37 பிரதான பாலங்கள் நிர்மாணச் செயற்திட்டம்) 2016.**

---

தேசிய வீதி வலையமைப்பின் பிரதான பாலங்கள் நிர்மாணச் செயற்திட்டத்தின் (37 பிரதான பாலங்கள் நிர்மாணச் செயற்திட்டம்) 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. இச் செயற்திட்டமானது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் (ஜீஓஎஸ்எல்) ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மைக்கும் (ஜேஐசீஏ) இடையில் கைச்சாத்திடப்பட்ட 2013 மார்ச் 14 ஆம் திகதிய எஸ்எல்-பி 108 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் கீழ் அமுல்ப்படுத்தப்படுகின்றது.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சாகவிருந்த தற்போதைய உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை செயற்திட்டத்தின் அமுல்ப்படுத்தல் முகவராக உள்ளது. தேசிய வீதிகளில் பிரதான பாலங்களை நிர்மாணிப்பதன் மூலம் தேசிய வீதி வலையமைப்பை முன்னேற்றுவதும் அதன் மூலம் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்தல் செயற்திட்டத்தின் நோக்கமாக உள்ளது. கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 27,250 மில்லியனிற்குச் சமமான ஜப்பான் யென் 16,132 மில்லியன் தொகையானதுடன் அதில் ரூபா 20,914 மில்லியனிற்குச் சமமான ஜப்பான் யென் 12,381 மில்லியன் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மையால் வழங்கப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2013 மார்ச் மாதத்தில் ஆரம்பித்திருந்ததுடன் 2018 யூலை அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட

கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்

(எ) நிதிக்கூற்றுக்களானவை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஐ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1. அபிப்பிராயம்

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும், இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து எழுகின்ற சீராக்கங்களின் தாக்கங்களைத் தவிர்த்தும்,

(அ) செயற்திட்டமானது 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களைத் திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும், மற்றும்

(ஈ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடு

ரூபா 382 மில்லியன் கூட்டுத்தொகையான வேலை ஆரம்பிப்பு முற்பணங்கள் பரிமாற்ற நட்டத்திற்கான சீராக்கம் மேற்கொள்ளப்படாததால் ரூபா 04 மில்லியனால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

#### 2.2.2 இணக்கம் செய்யப்படாத மீதிகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 25 பாலங்களின் மீள்நிர்மாணச் செயற்திட்டத்துடன் செயற்திட்டத்தால் பேணப்பட்ட உள்ளக நடைமுறைக் கணக்கில் காட்டப்பட்ட பெறவேண்டிய ரூபா 1.42 மில்லியன் மீதி மேற்குறிப்பிட்ட செயற்திட்டத்தால் பேணப்பட்ட உள்ளக நடைமுறைக் கணக்கில் காட்டப்பட்ட அதற்கு நேரொத்த செலுத்த வேண்டிய ரூபா 669,195 மீதியுடன் இணங்கியிருக்கவில்லை.

(ஆ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நடவடிக்கைகள் முடிவுறுத்தப்பட்டிருந்த அறிவுத்திறன் வாய்ந்த போக்குவரத்து முறைமை செயற்திட்டம், வறுமைக்குப் பின்னரான கிழக்கு உட்கட்டமைப்பு அபிவிருத்திச் செயற்திட்டம் மற்றும் மண்முனை நிர்மாணச் செயற்திட்டம் ஆகிய பெயர்களையுடைய 03 நன்கொடை நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்களிடமிருந்து ரூபா 74.66 மில்லியன் கூட்டுத்தொகையான பெறவேண்டிய மீதிகளின் அறவிடும் தன்மை சந்தேகத்திற்கிடமாகவுள்ள போதிலும் 2016 திசெம்பர் 31 வரையிலும் அவ் மீதிகள் நிலுவையாகவிருந்தன.

## 3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போது மற்றும் 2016 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு தொடர்பான சில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| மூலம் | கடன் உடன்படிக்கையின் பிரகாரம் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்திய நிதிகள் 2016 ஆம் ஆண்டின் போது | | பயன்படுத்திய நிதிகள் 2016 திசெம்பர் 31 வரை | |
|---|---|---|---|---|---|---|---|
| | ஜப்பான் யென் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஜப்பான் யென் மில்லியன் | ரூபா மில்லியன் | ஜப்பான் யென் மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஜேஐசீஏ | 12,381 | 20,914 | 2,150 | 1,629.70 | 2,163.11 | 3,671.48 | 4,488.97 |
| இலங்கை அரசாங்கம் | 3,751 | 6,336 | 205 | 95.04 | 120.24 | 180.76 | 228.68 |
| **மொத்தம்** | **16,132** | **27,250** | **2,355** | **1,724.74** | **2,283.35** | **3,852.24** | **4,717.65** |

மீள்நிர்மாண நோக்கங்களிற்காக கடன் வழங்கும் முகவரால் மேற்கொள்ளப்பட்ட ரூபா 20,914 மில்லியனிற்குச் சமமான ஜப்பான் யென் 12,381 மில்லியன் ஒதுக்கீட்டில் 29.65 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 4,488.97 மில்லியனிற்குச் சமமான ஜப்பான் யென் 3,671.48 மில்லியன் மாத்திரம் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்படுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும், ரூபா 13.76 மில்லியன் தொகையான கடப்பாட்டுக் கட்டணங்கள் அளிக்கப்படாத கடன் மீதி தொடர்பாக மீளாய்வாண்டின் போது கடன்வழங்கும் முகவரால் அறவிடப்பட்டிருந்தது. முக்கிய பதவியணியின் தெளிவாக இனங்காணப்பட்ட பொறுப்புக்கள் மற்றும் பௌதீக மற்றும் நிதிசார் இலக்குகள் போன்றவற்றுடனான விரிவான ஒட்டுமொத்தத் திட்டம் செயற்திட்டத்தால் தயாரிக்கப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது.

### 3.2 பௌதீக முன்னேற்றம்

செயற்திட்ட ஆவணங்களின் பிரகாரம், 05 மாகாணங்களிலுள்ள 37 பிரதான பாலங்களின் மீள்நிர்மாண வேலைகள் செயற்திட்டத்தால் மேற்கொள்ளப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டது. ஆகையால், 37 பாலங்களின் மீள்நிர்மாண வேலைகளிற்கான ஒப்பந்தங்கள் 05 ஒப்பந்தப் பொதிகளின் கீழ் வழங்குவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. அதில் ரூபா 7,098 மில்லியனிற்குச் சமமான ஜப்பான் யென் 5,666 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் தென் மாகாணத்திலும் ரூபா 3,785 மில்லியனிற்குச் சமமான ஜப்பான் யென் 3,126 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் வட மாகாணத்திலும் அமைந்துள்ள பாலங்களின் மீள்நிர்மாண வேலைகளிற்கான 02 ஒப்பந்தப் பொதிகள் மாத்திரம் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வழங்கப்பட்டிருந்தன. 2015 மார்ச் 20 இல் ஆரம்பிக்கப்பட்ட தென் மாகாணத்தின் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலுள்ள 10 பிரதான பாலங்களின் மீள்நிர்மாண வேலைகளின் பௌதீக செயன்முன்னேற்றம் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 90.37 சதவீத எதிர்பார்க்கப்பட்ட செயன்முன்னேற்றத்துடன் ஒப்பிடும் போது 73.19 சதவீதத்தில் மாத்திரமே காணப்பட்டது. மேலும், வட மாகாணத்தின் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் மன்னார் மாவட்டங்களிலுள்ள 08 பிரதான பாலங்களின் மீள்நிர்மாண வேலைகள் 2016 நவம்பர் 24 இல் 02 ஆண்டுகளிற்கு மேலான தாமதங்களுடன் வழங்கப்பட்டிருந்ததுடன் அத்தகைய பாலங்களின் மீள்நிர்மாண வேலைகள் 2016 திசெம்பர் 31 வரையிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.3 ஒப்பந்த நிர்வாகம்**

தென் மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்ட பால மீள்நிர்மாண வேலைகள் மீது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பொல்வத்தை பாலம், கொலேதந்த பாலம் மற்றும் கிஹிம்பீல பாலம் என்பவற்றின் மீள்நிர்மாண வேலைகள் 18 நாட்கள் தொடக்கம் 73 நாட்கள் வரையான காலவீச்சிலான தாமதங்களுடன் பூர்த்திசெய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) காலி, மாத்தறை மாவட்டங்களிலுள்ள 10 பாலங்களின் மீள்நிர்மாண வேலைகளின் ரூபா 7,098.09 மில்லியனான பொறியியலாளரின் மதிப்பீடு 19 தடவைகள் மேற்கொள்ளப்பட்ட விபரமான வடிவமைப்புக்களின் முரண்கள் காரணமாக ரூபா 7,112.80 மில்லியன் வரை அதிகரிக்கப்பட்டிருந்தது. ஆகையால், அளவீட்டுப்பட்டியலைத் தயாரிப்பதற்கு முன்னர் முறையான விபரமான பொறியியல் ஆய்வுகளை செயற்திட்டம் மேற்கொண்டிருக்கவில்லை என்பதை இது சுட்டிக்காட்டியது.

(இ) ரூபா 80.71 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் வழங்கப்பட்ட காலி மாவட்டத்திலுள்ள பொலதுமோதர பாலத்தின் மீள்நிர்மாண வேலைகள் மீதான ஒப்பந்தம் ரூபா 17.69 மில்லியன் பெறுமதியான வேலைகளை பூர்த்திசெய்த பின்னர் கட்டமைப்பு மூழ்கியிருந்தமையால் கைவிடப்பட்டிருந்தது. ஆகையால், புதிய பாலத்தை வடிவமைப்பதற்கு ரூபா 32.29 மில்லியன் மேலதிக தொகையை செயற்திட்டம் செலவிட வேண்டியிருந்தது.

(ஈ) காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களில் அமைந்துள்ள பாலங்களின் வீதி வெளிச்சமூட்டல் நோக்கங்களிற்காக மூல அளவீட்டுப்பட்டியல்களில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 34.47 மில்லியன் தொகையான ஒதுக்கீடு வீதிப் பாவனையாளர்களின் பாதுகாப்பைக் கருத்திற்கொள்ளாமல் பின்னர் நீக்கப்பட்டிருந்தது.

(உ) மீள்நிர்மாணிக்கப்பட்டு ஏனைய 09 பாலங்கள் மூலம் மீளமைக்கப்பட வேண்டிய பாலங்களாக ஆரம்பத்தில் இனங்காணப்பட்ட சப்ரகமுவ மாகாணத்தின் கேகாலை, இரத்தினபுரி மற்றும் குருணாகல் மாவட்டங்களிலுள்ள 09 பாலங்களின் மீள்நிர்மாண வேலைகளை செயற்மிட்டம் இரத்துச்செய்திருந்தது. ஆகையால், ஆரம்பத்தில் தெரிவுசெய்யப்பட்ட பாலங்களின் வடிவமைப்பிற்காக மதியுரையாளர்களிற்குச் செலுத்தப்பட்ட ரூபா 1.27 மில்லியன் தொகை பயனற்ற செலவினமாக இருந்தது.

**3.4 செயற்திட்டத்தின் காணி சுவீகரிப்பு மற்றும் மீள்குடியேற்ற நடவடிக்கைகள்**

2015 மார்ச் 20 இற்கு முன்னர் காணி சுவீகரிக்கப்பட்டு காணி சுவீகரிப்புச் செயன்முறை பூர்த்தி செய்யப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்ட தென் மாகாணத்தின் 05 பிரதேச செயலகப் பகுதிகளிலுள்ள 310 காணித்துண்டுகளில் காணி சுவீகரிப்பு அதிகாரச்சட்டத்தின் 17 ஆம் பிரிவின் கீழ் 07 காணித்துண்டுகளிற்காக ரூபா 71.55 மில்லியன் தொகையான இழப்பீடு மாத்திரமே செலுத்தப்பட்டிருந்தது. மேலும், 02 காணித்துண்டுகளிற்குரிய உரிமையாளர்களிற்கு ரூபா 14.63 மில்லியன் தொகையான இழப்பீடு செலுத்தப்பட்டிருந்த போதிலும் அவை 2017 ஏப்ரல் மாத இறுதி வரை ஒப்பந்ததாரரிற்கு கையளிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், பயன்பாட்டுச் சேவைகளை இடம்மாற்றுவதற்கு உரிய தரப்பினர்களிற்கு ரூபா 3.57 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் அவற்றின் மீதான தாமதங்கள் மீள்நிர்மாண வேலைகளை தொடர்வதற்கு தாக்கமளித்திருந்தது.

## 3.5 மனித வளங்கள் முகாமைத்துவம்

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த 62 பதவியணி நிலைகளில் மீளாய்வாண்டின் இறுதியில் செயற்திட்டத்தின் பதவியணி 32 உத்தியோகத்தர்களை உள்ளடக்கியிருந்தது. 03 பிரதம பொறியியலாளர்கள், 06 செயற்திட்டப் பொறியியலாளர்கள், 09 தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் உள்ளடங்கிய 39 பதவிகள் மீளாய்வாண்டின் இறுதியில் வெற்றிடமாக இருந்ததுடன் இது செயற்திட்ட நடவடிக்கைகளின் சீரான செயற்பாடுகளை பாதித்திருந்தது. மேலும், அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் இல்லாத 03 இலகு உபகரண செயற்படுத்துனர்கள் மற்றும் 04 முகாமைத்துவ உதவியாளர்கள் உள்ளடங்கலாக 09 நபர்கள் மீளாய்வாண்டின் போது வேலையிலீடுத்தப்பட்டிருந்ததுடன் ரூபா 4.24 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது.